DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 150/2026
Prosecution Witness - P.W. 4

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சபரிநாதன் |
| Father's Name | : | K. சந்திரன் |
| Village | : | கேசவன்புதூர் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | ஓட்டுநர் |
| Age | : | 38 |
| Date | : | 23.07.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2026.

(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

23.07.2026

**முதல் விசாரணை:-**

நான் தற்போது கேசவன்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியானவர் புலன் விசாரணை அலுவலரிடம் கூறிய கூற்றுக்களுக்கு முரணாக முதல் விசாரணை சாட்சியம் அளித்திருப்பதால் அவரை குறுக்கு விசாரணை செய்ய**

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் அவ்விசாரணையில் 07.10.2025 ஆம் தேதி மதியம் 2.00 மணியளவில் நானும் பரத் என்பவரும் பொழிக்கரை பீச்ரோட்டில் நின்று பேசி கொண்டிருந்த போது கண்ணன், கருண், பெரியசாமி, ஸ்ரீஹரிஷ் ஆகியோர்களை ஈத்தாமொழி காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைது செய்து விசாரணை செய்தார் என்றும், இந்த வழ்கின் 1 ஆம் எதிரி கண்ணன் தானாக வந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பரத்தும் இந்த வழக்கின் சொத்தான TN 75 L 0024 என்ற இனோவா காரையும், இந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாளையும் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் நானும், பரத் என்பவரும் கையொபப்பம் போட்டுவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.